අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/4/58/20/ஜ.பு./SLEAS ii-iii/2024

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025. .

.........................................................

இ.க.நி.சே. தரம் II / III

நேர்முகப் பரீட்சை இலக்கம் : ..........................

**<u>தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகியுள்ள அதிபர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை தெரிவு செய்வு செய்து நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்- இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II/III</u>**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் படி நாடு பூராகவும் அமைந்துள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II / III உத்தியோகத்தர் ஒருவர் அதிபராக பதவி வகிக்க வேண்டிய 24 தேசிய பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தாங்கள் அழைக்கப்படுகின்றீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

02. இதற்காக இசுருபாய, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் 3ம் மாடியில் அமைந்துள்ள கல்விச் செயலாளரின் கூட்ட மண்டபத்திற்கு ................ ம் திகதியன்று மு.ப 8.30 மணிக்கு சமூகமளிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். அன்றைய தினம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் நகல் பிரதிகள் அடங்கிய (இலக்கம் I முதல் XIII வரையான ஆவணங்கள்) கோவை ஒன்றை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப்படி தயாரித்து தங்களது பெயர் மற்றும் நேர்முகப் பரீட்சை இலக்கத்தைக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

I. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்
II. தேசிய அடையாள அட்டை/ வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
III. பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் மாத்திரம் அதற்கான சத்தியப் பிரமாணம்
IV. இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான முதல் நியமனக் கடிதம்
V. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமனத்தை நிரந்தப்படுத்துவதற்கான கடிதம்
VI. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II இற்கான பதவி உயர்வுக் கடிதம் (தரம் II இற்கு பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மாத்திரம்)
VII. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமனத்திற்காக கருத்தில் கொள்ளப்பட்ட ஆரம்ப பட்டம்/ ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்/ போதனாவியல் டிப்ளோமா
VIII. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II இற்கு பதவு உயர்வின் போது கருத்தில் கொள்ளப்பட்ட கல்விமானி பட்டம்/ பட்டப் பின் டிப்ளோமா/ கல்வி முகாமைத்துவம் அல்லது ஆட்சேர்க்கப்பட்ட பாடத்திற்குரிய பட்டப் பின் டிப்ளோமா அல்லது பட்டப் பின் பட்டச் சான்றிதழ்
IX. இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட தினம் முதல் விண்ணப்ப இறுதித் திகதி வரையில் வகித்த பதவிகள் மற்றும் அவ் அப் பதவிகளை வகித்த காலப் பகுதியை தனித் தனியாக குறிப்பிட்டு தனிப்பட்ட கோவையிலிருந்து பெறுக் கொள்ளப்பட்ட சேவைச் சான்றிதழ் மற்றும் அதற்குரிய நியமனக் கடிதங்கள் (**உரிய பதவிகளுக்குரிய நியமனக் கடிதங்களை நேர்முகப் பரீட்சையின் போது கட்டாயமாக முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.**)



Scanned with ACE Scanner

X. பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவம் (புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 02 இற்கமைய)

a) நிரந்தர அதிபராக, பிரதி அதிபராக தேசிய/ மாகாணப் பாடசாலைகளுக்கு நியமன/ இடமாற்றம் செய்யப்பட்டமைக்குரிய கடிதங்கள்

b) மேற்கூறப்பட்ட கடிதங்களை வழங்கும் போது, உரிய காலப் பகுதியுடன், பாடசாலை வகைப்படுத்தலுக்கமைய உரிய பாடசாலையானது 1AB,1C பாடசாலை என்பதையும் அக் கடிதத்தில் கையொப்பமிட்டிருப்பது உரிய அதிகாரியா எனப்தையும் நிரூபிக்கும் கடிதங்கள்

c) உரிய காலப் பகுதியுடன் பாடசாலை மேற்பார்வைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாக/ ஈடுபடுவதாக உறுதிப்படுத்தும் கடிதங்கள்

XI. மேலதிக கல்வித் தகைமைகள் (புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 03 இற்கமைய)

ஆட்சேர்ப்பின் போது அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிப்பதற்காக கருத்தில் கொள்ளப்பட்ட சான்றிதழ்ல் அல்லது தரங்களுக்கு பதவு உயர்வு வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் தவிர்த்து மேலதிக கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்ல்களும், தனியார் நிறுவனங்களூடாக வழங்கப்பட்ட வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்கு புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 03 இற்கமைய உரிய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

XII. சேவைச் சான்றிதழ் (புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 06 இற்கமைய)

XIII. புள்ளி வழங்கல் திட்டத்தின் இலக்கம் 07 இற்கமைய முன்வைப்புக்குரிய வன் பிரதி (பிரதியொன்று கோவையில் இணைக்கப்படல் வேண்டும்.)

03. புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் வலது பக்க மேல் மூலையில் புள்ளி வழங்கல் திட்டத்தின் எந்த தொடர் இலக்கத்தின் கீழ் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

உ+ம்: மேலதிக தகைமைகளுக்காக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்ல் – இணைப்பு இலக்கம் 03

அதற்கமைய நகல் பிரதிகள் அடங்கிய கோவை ஒன்றைத் தயாரித்து அதனை நேர்முகப் பரீட்சை சபையினரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும். பிரசுரிக்கப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தின் “குறிப்பு” எனும் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றை சரியாக வாசித்து சிறந்த புரிதல் சகிதம் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

04. மேலே நேர்முகப் பரீட்சைக்காக 2025.05.02 திகதியன்று அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் புள்ளி வழங்கல் திட்டத்திற்கமைய இந்த நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதராரர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

05 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட இத்துடன் தரப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்திற்கமைய, அக் குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் வழங்கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்த திறமை முன்னுரிமை, விண்ணப்பதாரரின் விருப்பு, சேவையின் தேவை, விண்ணப்பதாரர் தொடர்பில் காணப்பட்ட/ காணப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், பாடசாலையின் கலாசார பின்னணி/ மரபுகள், கற்றல் மொழி மூலம், பாடசாலை வகை (ஆண்/ பெண்/ கலவன்) மற்றும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய இன்னோரன்ன விடயங்களையும் கருத்தில் கொண்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் அதிபர் பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர்.

06. விண்ணப்பதாரர், உரிய விண்ணப்பப் படிவத்தில் விருப்பம் தெரிவித்துள்ள தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் கட்டாயமாக அப் பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்பதுடன், ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு காரணமும் இன்றி பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்க முடியாது. அத்துடன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பில் மாற்றம் செய்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வெற்றிடங்கள்

Scanned with ACE Scanner

ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர் ஒருவர் தெரிவு செய்யப்படாத வேறு பாடசாலை ஒன்றிற்கேனும் நியமிப்பது தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்.

07. நேர்முகப் பரீட்சையில் பங்கேற்பது மாத்திரம் வெற்றிடம் நிலவும் தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான உரித்தல்ல என்பதுடம் தற்போது வெற்றிடமாக உள்ள தேசிய பாடசாலை அதிபர் பதவிகள் அனைத்திற்கும் உத்தியோகத்தர்காளை நியமிப்பது அல்லது சில பதவிகளுக்கு மாத்திரம் உத்தியோகத்தர்களை நியமிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவிற்குரியது என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

08. உரிய திகதியில் இந்த நேர்முகப் பரீட்சையில் பங்கேற்கவில்லை எனின், அதற்காக பிறிதொரு தினம் வழங்கப்படமாட்டாது என்பதால் அத்தகைய கோரிக்கைகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், உரிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் கட்டாயமாக முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

09. நேர்முகப் பரீட்சையில் பங்கேற்பதற்காக பிரயாணச் செலவுகளோ வேறு எந்தவொரு கொடுப்பனவுகளோ செலுத்தப்படமாட்டாது

ஒப்பம்: நாலக களுவெவ
செயலாளர்

ஆர்.டீ ஜமிந்த
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)

Scanned with ACE Scanner